
# அதிகாலையில் ஆண்டவரோடு...

( ஒரு மணி நேரம் ஜெபிப்பது எப்படி? )



மோகன் சி. லாசரஸ்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489


If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# அதிகாலையில் ஆண்டவரோடு!

( ஒரு மணி நேரம் ஜெபிப்பது எப்படி?)



மோகன் சி. லாசரஸ்

வெளியீடு:
**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி – 628 211, தூத்துக்குடி மாவட்டம்.

முதல் பதிப்பு : 1995 டிசம்பர், 2,000 பிரதிகள்
2ம் பதிப்பு : 2010 ஜனவரி, 2,000 பிரதிகள்
3ம் பதிப்பு : 2010 ஜுலை, 5,000 பிரதிகள்
4ம் பதிப்பு : 2012 ஜுலை, 5,000 பிரதிகள்

## பொருளடக்கம்!


1. அதிகாலையில் ஆண்டவரோடு!

2. துதியுங்கள், ஸ்தோத்தரியுங்கள்!

3. வேதத்தை தியானியுங்கள்!

4. ஜெபியுங்கள்!

## உங்கள் சகோதரனிடமிருந்து...



**"...நீங்கள் ஒருமணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக் கூடாதா?**

**நீங்கள் சோதனைக்குட்படாத படிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது..." (மத்தேயு 26: 40,41)** என்று இயேசு சொன்னார்.

**ஜெபம் இல்லாதபடி, ஆண்டவருக்குப் பிரிய மான வாழ்க்கை வாழவே முடியாது!** ஜெபம் இல்லாதபடி சோதனைகளை மேற்கொள்ளவே முடியாது!

ஆகவேதான், தன்னோடு விழித்திருந்து **ஒரு மணி நேரமாவது ஜெபிக்க, இயேசு நம்மை அழைக் கிறார்.**

அநேகருக்கு ஜெபிக்க அதிக விருப்பம். ஆனால், ஜெபிக்க அவர்களால் முடியவில்லை. "ஒருமணி நேரம் எப்படி ஜெபிப்பது?" என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

இப்படிப்பட்ட தேவப் பிள்ளைகளுக்காகவே இந்தப் புத்தகத்தை எழுதும்படி, ஆவியானவர் என்னை ஏவினார்.

**தினமும் குறைந்தது ஒருமணி நேரமாவது, ஒரு தேவனுடைய பிள்ளை ஜெபிக்க வேண்டும்.** தினமும் அதிகாலையில் ஒருமணி நேரம் ஜெபித்து விட்டு, உங்கள் வேலைகளை ஆரம்பித்தால், அந்த நாள் முழுவதும் தேவப் பிரசன்னம் உங்களோடிருப்பதை உங்களால் உணர முடியும்.

ஆகவே, 'ஒருமணி நேரம் எப்படி ஜெபிப்பது?' என்பதைக் குறித்த ஒழுங்குகளை அறிந்து, அதைப் பின்பற்றினால், ஜெபிப்பது உங்களுக்குக் கடினமாகவே இருக்காது.

ஆண்டவர் எனக்குக் கற்றுக் கொடுத்து, நான் தினமும் ஜெபிக்கிற, என் அனுபவத்தையே இந்தப் புத்த கத்தில் எழுதியுள்ளேன்.

ஜெபத்தோடு வாசியுங்கள்! இந்தப் புத்தகம் உங்கள் ஜெப வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்!

இந்தச் செய்தியை எழுத எனக்குக் கிருபை கொடுத்த, என் நேசர் இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக!

இதை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



# அதிகாலையில் ஆண்டவரோடு!

"அவர் (இயேசு கிறிஸ்து) **அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்.**" **மாற்கு 1:35.**

ஒரு பொறுப்பான வேலையில் இருக்கும், ஒரு தகப்பனாரை எனக்குத் தெரியும். இயேசு கிறிஸ்துவுக்கென்று சாட்சியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். ஒருநாள், அவரோடு பிரயாணப்படுகிற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்து அவரிடத்தில் விசாரித்தேன்.

அப்பொழுது அவர், "அதிகாலையில் மூன்று அல்லது, நான்கு மணிக்கெல்லாம் ஆண்டவர் என்னை எழுப்புவார். அந்த அதிகாலை நேரத்தில், குறைந்தது ஒரு மணி நேரம் நான் ஜெபம் பண்ணுவேன்" என்றார்.

"ஒருமணி நேரம் என்ன ஜெபம் பண்ணுவீர்கள்?" என்று நான் கேட்டேன். "இந்தியா தேசத்தின் இரட்சிப்பிற்காக ஜெபிப்பேன். எனக்குத் தெரிந்த தேவ ஊழியர்களுக்காக ஜெபிப்பேன். ஊழியங்களுக்காக ஜெபிப்பேன், உங்களுக்காகக்கூட ஜெபிப்பேன், கடைசியாக என் குடும்பத்திற்காக ஜெபிப்பேன்.

அப்படி நான் ஜெபிக்கும்போது, வரப் போகிற காரியங்களை ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்துவார். என் குடும்பத்தில் இனி நடக்கப் போகிற காரியங்களையும்கூட வெளிப்படுத்துவார். அது ஒரு இனிமையான நேரமாக இருக்கும்" என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

இத்தனைக்கும், அவர் தினமும் காலை ஏழரை மணிக்கெல்லாம், தன் அலுவலகத்தில் இருக்க வேண்டும்!

இந்த அதிகாலை ஜெபம் அல்லாமல், மாலையில் வேலை முடிந்ததும், தினமும் தன்னோடு வேலை செய்யும் தேவப் பிள்ளைகளோடு இணைந்து ஜெபிப்பதாகவும் அவர் கூறினார்.

அவர் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பதையும், கர்த்தரால் அவர் உயர்த்தப்பட்டிருப்பதையும் கண்டு, கர்த்தரைத் துதித்தேன்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு வாலிபனை எனக்குத் தெரியும். கல்லூரி நாட்களிலேயே தினமும் காலையில் எழுந்து, தேவ சமூகத்தில் முழங்காலில் நிற்பான். அன்றைக்கு ஆண்டவர் தனக்கு ஒரு வாக்குக் கொடுக்கும்வரை, ஜெபித்துக் கொண்டேயிருப்பான். ஆவியானவரின் சத்தத்தைக் கேட்ட பிறகுதான், தன் முழங்காலை விட்டு எழுந்திருப்பான். அதனிமித்தமாக, வாலிப வயதிலேயே அவன் ஆண்டவருக்காகப் பிரகாசித்தான்.

என்னுடைய ஊழியப் பாதையில் ஒரு சமயம், பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த சுமார் 13 வயதுடைய ஒரு சிறு பெண்ணைச் சந்தித்தேன். அவளுக்காக ஜெபிக்க, என் கையை அவளுடைய தலையின் மீது நான் வைத்தபோது, ஒரு விசேஷித்த அபிஷேகம் என் மீது இறங்கிற்று. ஆவியானவர் அவளைக் குறித்து என்னோடு பேசினார். "இவள் என்னுடைய மகள், நான் இவளோடு பேசுகிறேன்" என்று அவளைக் குறித்து ஆண்டவர் சாட்சி கொடுத்தார்.

ஜெபம் முடிந்ததும், நான் அவளை அழைத்துப் பேச ஆரம்பித்தேன். "ஆண்டவர் உன்னோடு பேசுவது உண்டல்லவா!" என்று நான் கேட்டவுடனே, அவளுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது.

"ஆம்" என்று தலையாட்டினாள். "ஆண்டவர் உன்னோடு என்ன பேசுவார்? எப்படிப் பேசுவார்?" என்று கேட்டேன். "அதிகாலையில் எழுந்து, கர்த்தரைத் துதிப்பேன். நான் துதிக்கத் துதிக்க, அவருடைய பிரசன்னம், நான் ஜெபித்துக் கொண்டிருக்கிற அறைக்குள் இறங்கும். அப்பொழுது, இயேசு கிறிஸ்து வந்து, என் அருகில் நிற்பார்.

"மகளே, இந்தியாவில் இருக்கிற குடிகாரர்கள் இரட்சிக்கப்பட ஜெபி" என்பார். நான் கண்ணீரோடு ஜெபிப்பேன்.





"இந்தப் பட்டணத்திலுள்ள வாலிபர்கள் மனந்திரும்ப ஜெபி" என்பார். அதற்காக ஜெபிப்பேன். அவர் எந்தெந்தக் காரியங்களுக்காக ஜெபிக்கச் சொல்கிறாரோ; அந்தந்தக் காரியங்களுக்காகக் கண்ணீரோடு ஜெபிப்பேன்" என்றாள்.

**"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்." (நீதி. 8:17)**

என்ற தேவனுடைய வார்த்தை, எத்தனை உண்மையுள்ளது பாருங்கள்!

ஒரு தேவனுடைய பிள்ளை, தினமும் அதிகாலையில், அவருடைய பாதத்தில் அமர்ந்திருக்க வேண்டும்.

**"...நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோட கூட விழித்திருக்கக்கூடாதா?**

**நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்." மத்தேயு 26:40,41.**

'சி. டி. ஸ்டட்' என்ற ஒரு வாலிபன் இரட்சிக்கப்பட்டான். ஒரு கல்லூரி விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான். ஒருமுறை அங்கிருந்து, தன் தாயாருக்குக் கடிதம் எழுதியபோது,

"அம்மா, தினமும் காலையில் ஒருமணி நேரம் ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து ஜெபிக்கிறேன். என்றாவது ஒருநாள், ஒருமணி நேரம் ஜெபிக்காவிட்டால், அந்தநாள் முழுவதும் மயிர் கத்தரிக்கப்பட்ட சிம்சோனைப் போல் வல்லமை இழந்தவனாகி விடுகிறேன்" என்று எழுதினான்.

நம் வாழ்க்கையிலும் இது எத்தனை உண்மையாக இருக்கிறது பாருங்கள்! நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கலாம்! பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கலாம்! ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருக்கலாம்! கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம்! என்றாலும், குறைந்தது ஒருமணி நேரமாவது நீங்கள் ஜெபிக்கா

விட்டால், நீங்கள் வல்லமையற்ற விசுவாசிதான்! வல்லமை யற்ற ஊழியர்தான்! அதில் சந்தேகமே இல்லை!

**ஒரு விசுவாசி, குறைந்தது ஒருமணி நேரம் தினமும் ஆண்டவருடைய பாதத்தில் தனித்திருந்து ஜெபிக்க வேண்டும்.**

அல்லது, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவே முடியாது. **ஒரு தேவ ஊழியன், குறைந்தது மூன்று மணி நேரமாவது தனித்து ஜெபிக்க வேண்டும்.** அல்லது, வெற்றியுள்ள ஊழியம் செய்யவே முடியாது.

ஆண்டவருடைய பாதத்தில் காத்திருங்கள். புதிய கிருபைகளை, புதிய வல்லமைகளைப் பெற்றுக் கொள் வீர்கள். வெற்றியோடு முன்னேறிச் செல்வீர்கள்.

**ஏன் அதிகாலையில்?**

"அதிகாலையில் ஜெபித்தால்தான், ஆண்டவர் ஜெபத்தைக் கேட்பாரா? மற்ற நேரங்களில் ஜெபித்தால், அவர் கேட்க மாட்டாரா?"

எந்த நேரம் ஜெபித்தாலும், கர்த்தர் ஜெபத்தைக் கேட்பார்!

என்றாலும், உலகம் விழித்துக் கொள்ளும் முன் பாக தேவப் பிள்ளைகள் விழித்து, நம் நேசருடைய பாதத் தில் காத்திருப்பது, இனிமையான ஒரு ஜெப நேரம்!

அதிகாலை நேரத்தில், நம்முடைய மனம், உலக பாரங்கள், குழப்பங்கள் இல்லாதபடி தெளிவாக இருக்கும். உலகக் கவலைகள், பிரச்சனைகள் நம்மைச் சூழ்ந்து வரும் முன்பாக, காலை நேரத்தில் நம் இருதயம் இலகுவாக இருக் கும். அந்த நேரத்தில் ஒருமனதோடு நேசர் இயேசுவின் முகத்தைத் தேடுவது, நமக்கு இலகுவாகயிருக்கும்.

நேரம் ஆக ஆக, அந்த நாளுக்குரிய பிரச்சனை கள் சூழ்ந்து வந்து நம்மை அழுத்தி விடும். பிறகு நாம் விரும்பினாலும், அந்தநாள் முழுவதும் ஜெபிக்க முடியா மலே ஆகி விடும். அமைதியான அதிகாலை நேரத்தில், தேவனுடைய பாதத்தில் அமர்ந்திருக்கும்போது, அவரு டைய மெல்லிய சத்தத்தை உங்கள் இருதயத்தில் கேட்க





முடியும். அவருடைய மகிமையைக் கண்டு களிகூர முடியும்.

**"...அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்." (நீதி. 8:17)** என்று ஆண்டவர் சொல்வதை சிந்தித்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் சந்திக்கப் போகிற உங்கள் பிரச்சனைகளுக்கு முன்பாக, தேவைகளுக்கு முன்பாக, உங்கள் பிரச்சனைகளை மாற்றக் கூடிய, உங்கள் தேவைகளைச் சந்திக்கக்கூடிய, அந்த நாள் முழு வதும் உங்களோடிருந்து, உங்களுக்கு உதவி செய்யப் போகிற, **அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை, அதிகாலையில் முதலாவது சந்தித்து விடுங்கள்.**

அதிகாலையில், முதலாவது, நீங்கள் அவரை சந்தித்து விட்டால், அந்தநாள் முழுவதும் அவருடைய பிர சன்னத்தை உணர்வீர்கள். நீங்கள் தனிமையில் அல்ல, உங்களோடு வல்லமையுள்ள ஒரு தேவன் இருக்கிறார் என்ற நிச்சயமும், மகிழ்ச்சியும், தைரியமும், அந்தநாள் முழுவதும் உங்களுக்குள் இருக்கும்.

அந்த நாளில் எந்தப் பிரச்சனைகள், போராட் டங்கள், சோதனைகள், தேவைகள், உங்கள் வாழ்க் கையில் குறுக்கிட்டாலும், நீங்கள் அதை சுலபமாகத் தாண்டிச் செல்வீர்கள். ஒன்றும் உங்களை மேற்கொள் ளாது. நீங்கள் அவைகளை மேற்கொள்வீர்கள்.

ஒவ்வொரு நாளும் நாம் இந்த உலகத்தில் மனிதர்களைச் சந்திக்கும் முன்பாக, நம்மை உண்டாக் கின, நமக்காக தன் ஜீவனை சிலுவையில் கொடுத்த, நம்மை இரட்சித்த, நம் அன்பின் நேசர் இயேசுவை சந்திப்பதுதான் அவருக்கும் சந்தோஷம்.

ஆகவே, ஒவ்வொரு நாளும், முதல்மணி நேரத்தை அவருக்குக் கொடுத்து விடுங்கள்.

**முதலாவது,** அவருடைய பாதபடிக்குச் செல் லுங்கள்!

முதலாவது, **அவரோடு பேசுங்கள்!**

முதலாவது, அவருடைய சத்தத்தைக் கேளுங்கள்! முதலாவது, **அவருடைய வல்லமையைப் பெற்றுக் கொள்ளுங்கள்!**

**"விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி,...காலமே என் சமுகத்தில் வந்து நில்." (யாத். 34:2)** என்று, கர்த்தர் மோசேயோடே பேசினார்.

அந்த அதிகாலை நேரத்தில்தான் கர்த்தர் மோசேயோடு பல காரியங்களைப் பேசி, கற்றுக் கொடுத்தார்.

உங்களோடும் கர்த்தர் பேசுவார்! உங்களுக்கும் கற்றுக் கொடுப்பார்!

**என்னால் முடியுமா?**

"பள்ளிக்கூடத்திலே, அல்லது கல்லூரியிலே நான் படித்துக் கொண்டிருக்கிறேன். நான் படிக்க வேண்டிய பாடங்கள் ஏராளம் இருக்கிறது. என்னால் தினமும் காலை ஒருமணி நேரம் ஜெபிக்க முடியுமா?"

"நான் காலை ஆறு மணிக்கெல்லாம், என் தொழிலைக் கவனிக்க வெளியே செல்ல வேண்டும். என்னால் அப்படி ஜெபிக்க முடியுமா?"

"காலை ஐந்து மணிக்கே என் வீட்டு வேலைகளை ஆரம்பித்தால்தான், ஏழு மணிக்குள் வேலைகளை முடித்து, என் அலுவலகத்திற்குச் செல்ல முடியும்.

என்னால் ஒருமணி நேரம் ஜெபிக்க முடியுமா?"

முடியும்! உங்களால் முடியுமா?

**உங்களாலும் ஒருமணி நேரம் தினமும் ஜெபிக்க முடியும்!**

நீங்கள் அதை விரும்பும்போது, ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார். அதிகாலை வேளையில், ஆண்டவரோடு தனித்திருக்க நீங்கள் வாஞ்சிக்க வேண்டும்.

"நான் தினமும் காலையில் என் நேசர் இயேசுவின் பாதத்தில் தனித்திருப்பேன்" என்று தீர்மானிக்க வேண்டும். உங்கள் தீர்மானத்தின்படி, ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார். உங்கள் தொழில்





காரியமாக, அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் நீங்கள் பஸ்ஸுக்குச் செல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். இரவு எவ்வளவு பிந்திப் படுத்தாலும், காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து, புறப்பட்டு விடுகிறீர்கள்! 'என்னால் முடியாது!' என்று நீங்கள் சொல்வதில்லை.

காரணம் என்ன? சிந்தியுங்கள்!

'எப்படியும் நான்கு மணிக்கு எழுந்துவிட வேண்டும்' என்று நீங்கள் எடுத்த தீர்மானம்.

"காலை ஐந்து மணிக்கு எழுந்து பரீட்சைக்காகப் படிக்க வேண்டும்" என்று நினைக்கிறீர்கள். உங்களால் முடிகிறது. காலை ஐந்து மணிக்கு எழுந்து, புத்தகங்களைப் புரட்டுகிறீர்கள்.

காரணம் என்ன? உங்கள் தீர்மானம்தான்.

சிந்தியுங்கள்!

ஏதோ ஒரு விசேஷத்திற்காக உறவினர் வீட்டிற்குச் செல்ல அதிகாலை ஐந்து மணிக்குப் புறப்பட வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். 'என்னால் முடியாது!' என்று நீங்கள் இருப்பதில்லையே! நான்கு மணிக்கெல்லாம் எழுந்து, வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுகிறீர்களே!

காரணம் என்ன? சிந்தியுங்கள்!

நீங்கள் விரும்புகிற, நேசிக்கிற காரியத்தைச் செய்வதற்கு அதிகாலையானாலும் உங்களால் முடிகிறது.

இந்த உலகக் காரியங்களையெல்லாம் விட மிக முக்கியமானது, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்காக, இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருப்பதுதான்!

அதை விரும்புங்கள்! வாஞ்சையோடு நாடுங்கள்! "தினமும் ஒருமணி நேரமாவது என் இயேசுவோடு தனித்திருப்பேன்" என்று தீர்மானியுங்கள்.

அப்பொழுது, ஆண்டவரும் உங்கள் பெலவீனத்தில் உங்களுக்கு உதவி செய்வார். சென்னையிலுள்ள, ஒரு தேவனுடைய பிள்ளையின் வீட்டில், ஊழியத்தின் நிமித்தம் நான் தங்குவதுண்டு! அந்த வீட்டின் சகோதரர் சில

சமயங்களில் காலை ஐந்து மணிக்கெல்லாம் தன் தொழில் காரியமாக வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுவார்கள்.

ஆனால், இரவு எவ்வளவு நேரம் பிந்திப் படுத்தாலும், மறுநாள் அதிகாலையில் எழுந்து ஜெபிக்கிற சத்தத்தை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆண்டவரோடு பேசின பிறகுதான், தன் தொழில் காரியமாகச் செல்வார்கள்.

காரணம்! தான் செய்கிற தொழிலைக் காட்டிலும், அதிலிருந்து வருகிற வருமானத்தைக் காட்டிலும், தனக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி, தன்னை மீட்டுக் கொண்ட இயேசுவையே அதிகம் நேசித்தார்கள்.

உங்கள் படிப்பைவிட, வீட்டு வேலைகளை விட, தொழிலைவிட, வேலையைவிட, வருமானத்தைவிட, உங்களுக்காக சிலுவையில் பாடுபட்டு மரித்த, இயேசுவை நீங்கள் அதிகமாக நேசிக்க ஆரம்பித்து விட்டால், உங்களால் அவருடைய பாதத்தில் அமர்ந்திருக்காமல் இருக்க முடியாது.

**''அவர்** (இயேசு கிறிஸ்து) **அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்." மாற்கு 1:35.**

இயேசு கிறிஸ்து நமக்கு மாதிரியை முன் வைத்துப் போயிருக்கிறார். அவர் ஜெபித்தபடி, நீங்களும் ஜெபிக்க உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

உங்களால் முடியும்!

**தினமும் ஒருமணி நேரம் ஜெபிக்க உங்களால் முடியும்!**

**எப்படி ஜெபிப்பது?**

"ஒருமணி நேரம் எப்படி ஜெபிப்பது? எதற்காக ஜெபிப்பது? ஐந்து நிமிடத்திற்குள் நான் எல்லாக் காரியங்களுக்காகவும் ஜெபித்து முடித்து விடுவேனே! ஒரு மணி நேரம், எப்படி ஜெபத்தில் அமர்ந்திருக்கப் போகிறேன்?" இதைத்தான் உங்களோடு இந்தப் புத்தகத்தில் பகிர்ந்து





கொள்கிறேன். ஜெபத்தோடு வாசியுங்கள். இந்தப் புத்தகம், உங்கள் ஜெப வாழ்க்கையை ஆண்டவருக்குப் பிரியமாக மாற்றி விடும்.

ஆண்டவர் எனக்குக் கற்றுக் கொடுத்ததை, என் அனுபவத்தோடு உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**ஆயத்தப்படுங்கள்!**

எந்த ஒரு காரியத்திற்கும் ஆயத்தம் அவசியம். அதிகாலை ஜெபத்திற்கு உங்களை ஆயத்தப் படுத்திக் கொள்வதும் மிகவும் அவசியமான ஒரு காரியம்.

**முந்தின நாள்...**

அதிகாலை ஜெபத்திற்கு முந்தின நாள் இரவே, உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் மனதையும், சரீரத்தையும் ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இரவில் வீணாக உங்கள் நேரத்தைச் செலவிடாமல், சரீரத்திற்குத் தேவையான ஓய்வைக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அதிகாலையில் உற்சாகமாக உங்களால் எழுந்திருக்க முடியும்.

அதிகாலையில், எத்தனை மணிக்கு எழுந்து ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதை உங்கள் மனதில் பதித்துக் கொண்டு, இரவில் அதற்காக ஜெபியுங்கள்.

"ஆண்டவரே! அதிகாலை இத்தனை மணிக்கு நான் எழுந்து ஜெபிக்க, எனக்கு உதவி செய்யும்" என்று இரவில் ஜெபித்து விட்டுப் படுக்கைக்குச் சென்றால், சரியாக அதிகாலை நான்கு மணிக்கு உங்களுக்கு விழிப்பு வரும்.

உங்களைக் காட்டிலும் ஆண்டவர் உங்கள் ஜெபத்தில் அதிகப் பிரியமுள்ளவராயிருக்கிறார். நீங்கள் ஜெபிக்க விரும்புகிற நேரத்தில், அவரே உங்களைத் தேடி வருகிறதை, உங்களால் ஆவியில் உணர முடியும்.

கடிகாரத்தில் அலாரம் வைத்து எழும்பலாம். முந்தின நாள் இரவில் இதையெல்லாம் ஆயத்தப் படுத்திக் கொள்ளுங்கள்.

"காலையில் விழிப்பு வருகிற நேரம் ஜெபித்துக் கொள்ளலாம்" என்று நினையாதபடி, காலையில் ஒரு குறிப்பிட்ட நேரம் எழுந்து ஜெபிக்க, உங்கள் இருதயத்தில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் இப்படிப்பட்ட ஒழுங்குகளை நாம் கடைப்பிடிக்கா விட்டால், நாம் ஆண்டவருக்குள் வளரவே முடி யாது.

**அதிகாலையில்...**

விழித்தவுடன், அப்படியே படுக்கையில் முழங்கால்படியிட்டு விடாதீர்கள். படுக்கையிலேயே ஜெபிக்க ஆரம்பித்தால், சில நிமிட நேரத்தில், மறுபடியும், 'கொஞ்ச நேரம் படுத்துக் கொள்ளலாமே' என்ற உணர்வுதான் உங்களுக்கு உண்டாகும்.

படுக்கையிலேயே ஜெபிக்கிறவர்கள், சில நிமிட நேரத்தில் தங்களையும் மறந்து தூங்க ஆரம்பித்து விடுகிறார்கள். மறுபடியும் விழித்துப் பார்க்கும்போது, அவர்களுடைய ஜெப நேரமே முடிந்து போயிருக்கும்.

ஆகவே அதிகாலை எழுந்தவுடன், முதல் வேலையாக உங்கள் படுக்கையை சுருட்டி வைத்து விடுங்கள். அதாவது, "இனிமேல் நான் படுக்கப் போவதில்லை" என்கிற உணர்வு, உங்களுக்குள் வந்து விட வேண்டும்.

அடுத்து, பல் விளக்கி, முகத்தைக் கழுவி உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ஒரு பெரிய மனிதரையும் நீங்கள் தூக்கத்தை விட்டு எழுந்ததும், அப்படியே போய் சந்திக்க மாட்டீர்கள். உங்களை ஆயத்தப் படுத்தி, ஒழுங்கு செய்து கொண்ட பிறகுதான் சந்திப்பீர்கள்.

இப்பொழுது நீங்கள் சந்திக்கப் போவது, ஒரு சாதாரண மனிதரை அல்ல; அவர் தேவாதி தேவன்! இந்த உலகத்தையே சிருஷ்டித்தவர்!

சர்வ வல்லமையுள்ளவர்! அப்படிப்பட்ட ஆண்டவரைச் சந்திக்க, உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வது எவ்வளவு அவசியம் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.





**ஜெபிக்கிற இடம்!**

வழக்கமாக ஜெபிப்பதற்கு ஒரு இடத்தை ஆயத்தப் படுத்திக் கொள்வது நல்லது. வசதி இருந்தால், உங்கள் வீட்டில் ஜெபிப்பதற்கு ஒரு ஜெப அறையை (PRAYER ROOM) ஒதுக்கிக் கொள்வது நல் லது.

வசதியில்லாவிட்டால், உங்கள் வீட்டிலுள்ள ஒரு அறையின் ஒரு மூலையை ஜெபிப்பதற்காக ஒதுக்கிக் கொள்ளுங்கள் (PRAYER CORNER).

ஒரு சமயம், எனக்குத் தெரிந்த ஒரு தேவனுடைய பிள்ளையின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கே வராண்டாவில் ஒரு மூலையில் ஸ்கிரீன் போட்டு, ஒரு சிறிய மறைப்பை உண்டாக்கியிருந்தார்கள். அது ஒரு சிறிய அறையைப்போல காணப்பட்டது. "எதற்காக இப்படிப் போட்டிருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன். "எங்கள் வீடு ஒரு சிறிய வீடு. ஒரே ஒரு அறைதான் இருக்கிறது. நாங்கள் தனித்து ஜெபிக்க வேண்டுமென்றால் வசதியில்லை.

ஆகவே, இங்கே ஸ்கிரீன் போட்டு, ஒரு அறையை உண்டாக்கியிருக்கிறோம். நானோ, என் பிள்ளைகளோ தனித்து ஜெபிக்க விரும்பும்போது, அதற்குள் போய் முழங்கால்படியிட்டு ஜெபிப்போம். நாங்கள் ஜெபிக்க ஆரம்பித்து விட்டால், யாருடைய தொந்தரவும் இருக்காது" என்றார்கள்.

நீங்களும் இப்படிச் செய்து கொள்ளலாம். ஜெபிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கிக் கொண்டால், உங்கள் ஜெப வாழ்க்கையில் ஒரு உற்சாகம் உண்டாகும்.

நான் பெரும்பாலும் எங்கள் வீட்டிற்கு அருகில் இருக்கும் தோட்டத்திற்குச் சென்று ஜெபிப்பது உண்டு. அது, ஜெபத்தில் எனக்கு அதிக உற்சாகத்தைக் கொடுக்கிறது. எங்கள் வீட்டு அறையிலும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் காத்திருந்து ஜெபிப்பதுண்டு.

"இப்படி ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து ஜெபித்தால்தான், ஆண்டவர் பதில் கொடுப்பாரா?" என்ற தவறான எண்ணத்திற்கு இடம் கொடுத்து விடாதீர்கள். எந்த இடத்தில் இருந்து கொண்டு, எந்த நேரம் ஜெபித்தாலும், ஆண்டவர்

பதில் கொடுப்பார். அதே சமயத்தில், நம்முடைய ஜெப வாழ்க்கையில் நாம் வளர்வதற்கு சில ஒழுங்குகளைக் கடைப் பிடித்தால் நல்லது. அது நம்முடைய ஜெப வாழ்க்கைக்கு உதவியாயிருக்கும்.

இயேசு கிறிஸ்துவும்கூட ஜெபிப்பதற்கு சில இடங்களைத் தெரிந்து கொண்டார். வனாந்தரத்தில் போய் ஜெபித்தார் **(மாற்கு 1:35).** மலை உச்சியில் போய் ஜெபித்தார் **(மத்தேயு 14:23).** தோட்டத்தில் போய் ஜெபித்தார் **(மத்தேயு 26:36).**

நீங்களும் இயேசுவோடு தனித்திருப்பதற்கு ஒரு இடத்தை ஒழுங்கு செய்து கொள்ளுங்கள்.

**நீங்களும், உங்கள் வேதப் புத்தகமும் !**

அதிகாலையில் நீங்கள் ஜெபிக்கும்போது, உங்கள் வேதப் புத்தகமும் உங்களோடு இருக்க வேண்டும். நீங்கள் மட்டும் ஆண்டவரோடு பேசுவதில்லை, அவரும் உங்களோடு பேச இடம் கொடுக்க வேண்டும். தன்னுடைய வார்த்தையாகிய வேதப் புத்தகத்தின் மூலம், அவர் உங்களோடு பேசுவார். ஆகவே, **உங்கள் ஜெபத்தில் முக்கியமான ஒரு பகுதி, வேதத்தை தியானிப்பது.**

அதிகாலையில் எழுந்து, வேதப் புத்தகத்தைத் தேடிக் கொண்டிக்காதீர்கள். முந்தின நாள் இரவிலேயே உங்கள் படுக்கையின் அருகில் வைத்துக் கொள்ளுங்கள்.

இப்பொழுது நீங்கள் ஜெபத்திற்கு ஆயத்தமாகி விட்டீர்கள். அதிகாலையில் எழுந்து, உங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு, உங்கள் வேதப் புத்தகத்தோடு ஜெபிக்க முழங்கால்படியிட்டு விட்டீர்கள்.

ஒரு மணி நேரம் எப்படி ஜெபிப்பது?

உங்கள் ஜெப நேரத்தை **மூன்று பகுதி**களாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.

1. முதல் 20 நிமிடங்கள்: **துதியுங்கள், ஸ்தோத்தரியுங்கள்!**
2. அடுத்த 20 நிமிடங்கள்: **தியானியுங்கள்!**
3. அடுத்த 20 நிமிடங்கள்: **ஜெபியுங்கள்!**





1. முதல் 20 நிமிடங்கள் :

## துதியுங்கள், ஸ்தோத்தரியுங்கள்!



ஜெபத்தில் முதல் பகுதி, கர்த்தரைத் துதிப்பது! அதாவது கர்த்தரை ஆராதிப்பது! நம்முடைய தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர். நாம் கர்த்தரைத் துதிக்கும்போது, நம் மத்தியில் அவர் இறங்கி வருவார்.

**"அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்." சங். 100:4.**

**"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்." சங். 34:1.**

இதில் இரண்டு காரியங்கள் இருப்பதைக் கவனியுங்கள்!

1. **துதிப்பது**–கர்த்தருடைய வல்லமையையும், மகத்துவங்களையும் சொல்லி, அவரைப் புகழ்வது.

2. **ஸ்தோத்தரிப்பது**–கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி சொல்வது.

**1. துதிப்பது** (PRAISING)

கர்த்தருடைய நாமங்களையும், அவர் செய்த அற்புதங்களையும், அவருடைய வல்லமையையும், கிரியைகளையும் சொல்லிச் சொல்லி, அவரைப் புகழ்வது.

"ஆபிரகாமின் தேவனே, ஈசாக்கின் தேவனே, யாக்கோபின் தேவனே, உம்மைத் துதிக்கிறேன்!

நீர் என்னுடைய தேவனாக இருக்கிறதற்காக, உம்மைத் துதிக்கிறேன்!

உலகத்தை அழகாக உண்டாக்கினவரே, உம்மைத் துதிக்கிறேன்! என்னை உமது சாயலில் உருவாக்கினீரே, உம் மைப் புகழ்கிறேன்!

யேகோவா-யீரே, உம்மைத் துதிக்கிறேன்!

யேகோவா-நிசி, உம்மைத் துதிக்கிறேன்!

யேகோவா-ஷாலோம், உம்மைத் துதிக்கிறேன்!

சர்வ வல்லமையுள்ளவரே, உம்மைத் துதிக்கிறேன்! செங்கடலைப் பிளந்தவரே, உம்மைத் துதிக்கிறேன்! எரிகோவை விழத் தள்ளினவரே, உம்மைத் துதிக்கிறேன்! யோர்தானைப் பிரித்தவரே, உம்மைத் துதிக்கிறேன்!"... என்று,

இப்படிக் கர்த்தருடைய நாமங்களையும், அவர் செய்த அற்புதங்களையும் சொல்லி அவரைப் புகழுங்கள்.

"இயேசுவே, என் இரட்சகரே, உம்மைத் துதிக்கிறேன்! என் நல்ல மேய்ப்பரே, உம்மைத் துதிக்கிறேன்! ஆலோசனைக் கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்!"... என்று, இப்படி இயேசு கிறிஸ்துவின் நாமங்களையும், அவருடைய அற்புதங்களையும் சொல்லி அவரைப் புகழுங்கள். "பரிசுத்த ஆவியானவரே, உம்மைத் துதிக்கிறேன்! தேற்றரவாளனே, உம்மைத் துதிக்கிறேன்! அன்பின் ஆவியானவரே, உம்மைத் துதிக்கிறேன்! வல்லமையின் ஆவியானவரே, உம்மைத் துதிக்கிறேன்!

இயேசுவே, என் இரட்சகரே, உம்மைத் துதிக்கிறேன்! என் நல்ல மேய்ப்பரே, உம்மைத் துதிக்கிறேன்! ஆலோசனைக் கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஞானத்தின் ஆவியானவரே, உம்மைத் துதிக்கிறேன்!"... என்று,

இப்படி பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும், அவருடைய கிரியைகளையும் சொல்லி அவரைப் புகழுங்கள்!

இப்படி, வேதப் புத்தகத்தில் கர்த்தரைக் குறித்து எழுதப்பட்டிருக்கிற அவருடைய பெயர்களையும், அவருடைய அற்புதமான செயல்களையும் சொல்லி, அவரைத் துதியுங்கள்.

நான் தினமும் காலையில், என் ஜெப நேரத்தில் இப்படித்தான் கர்த்தரைத் துதிப்பதுண்டு.





**2. ஸ்தோத்தரிப்பது** (THANKS GIVING)

கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி சொல்வது. அவர் உங்களுக்குச் செய்த நன்மைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால், உங்களால் அவருக்கு நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது.

நான் என் ஜெப நேரத்தில் கர்த்தரை ஸ்தோத்தரிக்கும்போது, மூன்று காரியங்களை மனதில் வைத்து அவருக்கு நன்றி சொல்வதுண்டு.

**1) ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்!**

"ஆண்டவரே, நீர் என்னை இரட்சித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம்! என் பாவங்களையெல்லாம் மன்னித்து, அவைகளை மறந்து விட்டதற்காக ஸ்தோத்திரம்! என்னை உம்முடைய பிள்ளையாக்கினதற்காக ஸ்தோத்திரம்!

பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பினதற்காக உமக்கு நன்றி! ஊழியத்திற்கு என்னைத் தெரிந்து கொண்டதற்காக உமக்கு நன்றி!" என்று, அவர் எனக்குக் கொடுத்த எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும், அவருக்கு ஸ்தோத்திரம் சொல்வேன்.

**2) சரீர ஆசீர்வாதம்!**

நான் இன்று நல்ல சரீர சுகத்தோடு இருப்பது ஆண்டவருடைய கிருபை. அவர் எனக்குக் கொடுத்திருக்கிற நல்ல சரீர சுகத்திற்காக, அவருக்கு நன்றி சொல்வேன்.

"ஆரோக்கியமுள்ள நல்ல கண் பார்வையைத் தந்திருக்கிறதற்காக, ஆண்டவரே, உமக்கு நன்றி!

ஆரோக்கியமான நல்ல இருதயத்தைத் தந்திருக்கிறதற்காக, இயேசுவே, உமக்கு ஸ்தோத்திரம்! நல்ல சுகமான கைகளுக்காக, கால்களுக்காக..." என்று, இப்படி ஒவ்வொரு உறுப்புகளுக்காகவும் அவருக்கு நன்றி சொல்வேன்.

**3) உலக ஆசீர்வாதங்கள்!**

ஆண்டவர் எனக்குக் கொடுத்திருக்கிற எல்லா நன்மையான ஈவுகளுக்காகவும் அவருக்கு நன்றி சொல்வேன். உணவுக்காக, உடைக்காக, வீட்டிற்காக . . . இப்படி ஒவ்வொரு நன்மைகளையும் சொல்லிச் சொல்லி, அவருக்கு நன்றி சொல்வேன்.

இப்படியாகக் கர்த்தரைத் துதித்து, ஸ்தோத்தரிக்கும்போது, அவருடைய மகிமையின் பிரசன்னம் என்னை நிரப்புவதை உணர்கிறேன். என் பெலவீனம், சோர்புகளெல்லாம் மாறி, ஒரு புது வல்லமை, சந்தோஷம் என் உள்ளத்தை நிரப்புகிறது.

இந்தத் துதியின் நேரத்தில், கர்த்தரைப் பாடல்கள் மூலமாகப் பாடி ஆராதிக்கின்றேன்.

கர்த்தரைப் பாடித் துதிக்கத் துதிக்க, பரிசுத்த ஆவியானவரின் மகிமை என்னை ஆட்கொள்வதை என்னால் உணர முடிகிறது.

நீங்களும் இப்படிக் கர்த்தரைத் துதித்து மகிழுங்கள். ஒரு துதியின் பாடலைப் பாடுங்கள். உங்கள் குரல் கேட்பதற்கு இனிமையாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பாடுகிற உங்கள் இருதயத்தைப் பார்த்து, ஆண்டவர் சொக்கி விடுவார்.

பரிசுத்த ஆவிக்குள் நிறைந்து அவரைத் துதியுங்கள். நான் பல சமயங்களில் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் அவரைப் பல நிமிட நேரம் துதித்துக் கொண்டேயிருப்பேன். சில சமயங்களில் அந்நிய பாஷையில் பாடி, அவரைத் துதித்து மகிழ்வதுண்டு.

சில நாட்களில் விண்ணப்பமேயில்லாமல் இப்படிக் கர்த்தரைத் துதிப்பதிலேயே என் ஜெப நேரமெல்லாம் கழிந்து விடும்.

கர்த்தரைத் துதித்து மகிழுங்கள். கர்த்தருடைய சமூகத்தில் மகிழ்ந்து களிகூருங்கள்.

இப்படி நீங்கள் கர்த்தரைத் துதிக்கத் துதிக்க, உங்கள் ஆவியில் ஒரு புது உற்சாகம் வந்துவிடும். உங்கள் சரீரக் களைப்புகளெல்லாம் மாறி விடும். துதிகளின்





மத்தியில் வாசம் பண்ணும் கர்த்தர் உங்கள் மத்தியில் இறங்கி வந்து விடுவார். அவருடைய பிரசன்னத்தை உங்கள் ஆவியில் உங்களால் உணர முடியும். இந்த ஆவியானவருடைய பிரசன்னத்தோடு அடுத்த பகுதிக்குச் செல்ல வேண்டும்.

2) 20 நிமிடங்கள் :

## வேதத்தை தியானியுங்கள்!



தேவப் பிரசன்னம் உங்களை நிரப்பிய உடன், பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தோடு வேதத்தைத் தியானியுங்கள்.

**''என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது; அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்." சங். 39:3.**

கர்த்தருடைய வசனத்தைத் தியானிக்கத் தியானிக்க, நம் உள்ளம் அனல் கொள்ளும். அந்த அக்கினியின் வல்லமையோடு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

நம் இருதயம் அனல் கொள்ள வேண்டுமானால், கர்த்தருடைய வசனத்தைக் கருத்தாக தியானிக்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு கிராமத்திற்கு தேவனுடைய வார்த்தையை அறிவிக்கச் சென்றிருந்தேன். என்னை ஒரு வீட்டின் மாடியில் தங்க வைத்திருந்தார்கள். ஒருநாள் ஜெபித்து முடித்து விட்டு, ஆயத்தமாகி, கூட்டத்திற்காக மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தேன்.

ஒரு சகோதரி, தன் கையில் அழகான ஒரு பெண் குழந்தையோடு நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்த சகோதரர்களில் ஒருவர் அருகில் நின்று கொண்டிருந்தார். "இந்த சகோதரி வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள். கூட்டம் முடிந்த பிறகு

வீட்டுக்குச் செல்ல பஸ் வசதியில்லை. ஆகவே இப்பொ முதே ஜெபித்து விடுங்கள்" என்று அந்த சகோதரர் என்னிடத்தில் சொன்னார்.

"உங்களுக்கு எதற்காக ஜெபிக்க வேண்டும்?" என்று, அந்த சகோதரியினிடத்தில் நான் கேட்ட பொழுது, அவர்களுடைய கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. "நன்றாக ஓடி விளையாடிக் கொண்டிருந்த என்னுடைய இந்தக் குழந்தைக்கு, திடீரென்று நடக்க முடியாமல் ஆகி விட்டது" என்று தன் குழந்தையைக் காட்டினார்கள்.

அழகான பெண் குழந்தை. தாய்க்கு அது எத்தனை வேதனையான காரியம்! அந்த சகோதரியின் கண்ணீர், என் உள்ளத்தை உடைத்தது. என் கரத்தை அந்தக் குழந்தையின் மீது வைத்து, ஆண்டவருடைய முகத்தை நோக்கினேன். அப்பொழுது, ஆண்டவர் என்னோடு பேச ஆரம்பித்தார்.

"மகனே, அந்தக் குழந்தைக்காக ஜெபிக்கும் முன்பாக, அந்தத் தாயினிடத்தில் நீ ஒரு கேள்வி கேட்க வேண்டும்" என்றார். ஆவியானவர் தெளிவாக என்னோடு பேசினபடியால், நான் ஜெபத்தை நிறுத்தி விட்டு, அந்த சகோதரியைப் பார்த்து, "சகோதரி, நீங்கள் வேதம் வாசித்து, ஜெபித்து எத்தனை மாதங்களாயிற்று?' என்று கர்த்தர் கேட்கிறார்" என்றேன்.

அதற்கு அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. தலையைக் கவிழ்த்துக் கொண்டு அழுதார்கள். "நீங்கள் இன்றுமுதல், தினமும் வேதத்தை தியானித்து, ஜெபியுங்கள். ஆண்டவர் உங்கள் குழந்தையை நடக்கச் செய்வார்" என்று ஆலோசனை கொடுத்து, ஜெபித்து அனுப்பினேன்.

சில மாதங்கள் கழித்து, அந்த சகோதரி தினமும் வேதம் வாசித்து, தியானித்து ஜெபிப்பதாகவும், அந்தக் குழந்தையும் மிக அற்புதமாக சுகமாக்கப்பட்டு, நன்றாக நடந்து, ஓடி விளையாடுவதாகவும், அவர்களுடைய உறவினர் ஒருவர் மூலமாக நான் கேள்விப்பட்டு, கர்த்தரைத் துதித்தேன்.





**"...நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்." (ஓசியா 4:6)** என்ற தேவனுடைய வார்த்தையை என்றைக்கும் உங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**'ஜார்ஜ் முல்லர்'** என்கிற ஒரு தேவ மனிதர், ஒரு விசுவாச வீரன்! விசுவாச ஜெபத்தினால் பெரிய பெரிய காரியங்களையெல்லாம் சாதித்தவர். ஆயிரக்கணக்கான அனாதைப் பிள்ளைகளை விடுதியில் வைத்து, கர்த்தரை விசுவாசித்து, வளர்த்து வந்தார். தினமும் காலையில் எழுந்ததும், அந்த நாளுக்குரிய தேவைகளுக்காக விசுவாசத்தோடு கருத்தாக ஜெபிப்பார்; அற்புதங்களைக் கண்டார்!

ஒருநாள், தன்னுடைய சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையில் வல்லமை குன்றிப் போயிருப்பதை உணர்ந்தார். அப்பொழுது, ஆவியானவர் அவருடைய குறைவை அவருக்குச் சுட்டிக் காண்பித்தார். அதாவது, தான் வேதத்தை தியானிக்காத குறைவை உணர்ந்தார்.

அதன் பிறகு, தினமும் காலையில் முதலாவது வேதத்தை வாசித்து, தியானிப்பார். அதன் பிறகு, தான் தியானித்த வசனங்களைச் சொல்லி ஜெபிப்பார். இப்படிச் செய்ததன் மூலம், தன் ஆவிக்குரிய வாழ்க்கையில் புது பெலனை உணர்ந்தார்.

இவர், தன் வாழ்நாளில் வேதப் புத்தகம் முழுவதையும் சுமார் 200 தடவைக்கும் மேலாக வாசித்து முடித்திருக்கிறார்! இதில் 100 முறைக்கும் மேலாக முழங்காலில் நின்றே வாசித்திருக்கிறார்!

**"நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." (1 பேதுரு 2:3)** என்று, பரிசுத்த **பேதுரு** சொல்வது, எத்தனை உண்மையான காரியம்!

நீங்கள் கிறிஸ்துவுக்குள் வளர வேண்டுமானால், வேத வசனங்களைக் கருத்தாக தியானிக்க வேண்டும்.

**வாசிப்பதல்ல, தியானிப்பது!**

பெரும்பாலான கிறிஸ்தவர்கள், தினமும் காலையில், சங்கீதப் புத்தகத்தைத் திருப்புவார்கள். சிறிய ஒரு சங்கீதமாகப் பார்த்து வாசிப்பார்கள். "இன்று வேதம் வாசித்து விட்டேன்" என்ற திருப்தியோடு வேதத்தை அப்படியே மூடி விடுவார்கள்.

இன்னும் சிலர், கண்களை மூடிக் கொண்டு வேதத்தைத் திறப்பார்கள். திறந்த பக்கத்தில் தன் விரலை வைப்பார்கள். எந்த வசனத்தில் விரல் வைக்கப்பட்டிருக்குமோ, அந்த வசனத்தை வாசித்து, அதில் திருப்தியடைந்து விடுவார்கள்.

கடமைக்காக வேதத்தை வாசிப்பதில் பிரயோஜனமில்லை. "இன்று, இந்த வேத வசனத்தின் மூலம், கர்த்தர் என்னோடு பேசினார்" என்று சொல்லக்கூடிய அனுபவம் உங்களுக்கு இருக்க வேண்டும்.

சிலர், "தினமும் ஐந்து அல்லது, பத்து அதிகாரம் வாசிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தோடு வாசிப்பார்கள்.

வேதத்தை அதிகமாக வாசித்து, ஆராய்ந்து பார்ப்பது அவசியம்தான். அப்படிப் பல அதிகாரங்களை வாசிக்க, ஆராய்ச்சி செய்ய, மாலை நேரம் அல்லது, மற்ற வசதியான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம். அதிகாலை நேரத்தை வேதத்தைத் தியானிப்பதற்காக அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

**"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." சங். 1:2.**

எப்படி தியானிப்பது? வேதத்தை தியானிப்பதில் ஒரு ஒழுங்கைக் கடைப் பிடிப்பது நல்லது.

சிலர், தினமும் காலையில் தியானப் புத்தகங்களைப் பயன்படுத்துவார்கள். நல்லது!

**"அன்றன்றுள்ள அப்பம்", "நமது அன்றாட அப்பம்", "காலை-மாலை தியானங்கள்"**... என்று, இப்படி தமிழிலும், ஆங்கிலத்திலும் பல தியானப் புத்தகங்கள் இருக்கின்றன.





இவைகளில் அன்றன்றைக்குள்ள வேதப் பகுதியைக் கருத்தாய் வாசித்து, தியானப் பகுதியையும் கருத்தாய் வாசித்து, தியானிப்பது உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

சிலர் ஆதியாகமத்திலிருந்து ஒவ்வொரு அதிகாரமாக தியானித்துக் கொண்டு வருவார்கள். சிலர் ஒவ்வொரு புத்தகமாகத் தெரிந்தெடுத்து தியானிப்பார்கள்.

எந்த முறையானாலும், **"வேதத்தைத் தியானிக்க வேண்டும்"** என்பதுதான் முக்கியம். உங்களுக்குப் பிரியமான ஒரு முறையைத் தெரிந்தெடுத்து, அதை ஒழுங்காகக் கடைப் பிடிப்பது நல்லது.

**என் அனுபவம்!**

கர்த்தரைத் துதித்த பிறகு, ஆவியானவருடைய பிரசன்னத்தோடு என் வேதத்தைத் திறப்பேன். முழங்காலிலேயே வேதத்தைத் தியானிப்பதுதான் என் பழக்கம். ஆதியாகமத்திலிருந்து கிரமமாக, தொடர்ந்து நான் தியானித்து வருகிறேன்.

வேதத்தைத் திறந்தவுடன், அந்த வேதப் புத்தகத்திற்காகக் கர்த்தரை துதிப்பேன். "இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தைகளையும், எழுத்தையும்கூட அப்படியே விசுவாசிக்கிறேன் ஆண்டவரே!' என்று சொல்வேன். வேதத்தை வாசிக்கும்போது, என்னோடு பேசும் ஆண்டவரே!" என்று ஜெபிப்பேன்.

ஜெபத்தோடு வாசிக்க ஆரம்பிப்பேன். எந்த வசனத்தைக் கொண்டு கர்த்தர் பேச விரும்புகிறாரோ, அந்த வசனம் வந்தவுடன், அடுத்த வசனத்திற்கு நான் போய் விடாதபடி, ஆவியானவர் என்னை அந்த இடத்தில் நிறுத்துவார்.

உடனே, 'கர்த்தர் இந்த வசனத்தைக் கொண்டுதான் என்னோடு பேச விரும்புகிறார்' என்பதை என் ஆவியில் என்னால் உணர முடியும். அந்தக் குறிப்பிட்ட வசனத்தைத் திரும்பத் திரும்ப வாசிப்பேன். சத்தமாக வாசிப்பேன். "ஆண்டவரே, இந்த வசனத்தைக் கொண்டு

என்னோடு என்ன பேச விரும்புகிறீர்?" என்று சொல்லி, கருத்தாக ஜெபிப்பேன். அந்த வசனத்தை என் முன் வைத்து தியானிப்பேன்.

அப்பொழுது, ஆவியானவர் என்னோடு பேச ஆரம்பிப்பார். சில சமயங்களில், அந்த வசனத்திற்குத் தொடர்புடைய இன்னொரு வசனத்தை ஞாபகப்படுத் துவார். அந்த வசனத்தைக் கண்டு பிடித்து வாசிப்பேன்.

அந்தக் குறிப்பிட்ட வசனத்தை வைத்தே, பல நிமிட நேரங்கள் ஜெபிப்பேன்.

சில சமயங்களில், ஆவியானவர் வேத வச னத்தைக் கொண்டு, என் பாவத்தைக் சுட்டிக் காட்டுவார். அதை அறிக்கையிட்டு, என் மன்னிப்பிற்காக ஜெபிப்பேன்.

சில சமயங்களில், நான் செய்த தவறை வேத வசனத்தின் மூலம் கர்த்தர் எனக்குச் சுட்டிக் காட்டுவார். என்னை சரிப்படுத்திக் கொள்ள, அர்ப்பணித்து ஜெபிப்பேன்.

சில சமயங்களில், அந்த வசனத்தின் மூலம் தேவனுடைய சித்தத்தைக் கர்த்தர் எனக்கு வெளிப் படுத்துவார். அவருடைய சித்தத்தைச் செய்ய, என்னை ஒப்புக் கொடுத்து ஜெபிப்பேன். அப்பொழுது, ஆவியா னவர் என்னோடு பேச ஆரம்பிப்பார்.

சில சமயங்களில், அந்த வசனத்திற்குத் தொடர்புடைய வசனங்களை ஆவியானவர் எனக்கு ஞாபகப் படுத்துவார். அந்த வசனத்தை வேதாகமத்தில் தேடிக் கண்டு பிடித்து வாசிப்பேன்.

அந்தக் குறிப்பிட்ட வசனத்தை வைத்தே பல நிமிட நேரங்கள் ஜெபிப்பேன்.

சில சமயங்களில், வேத வசனங்களைக் கொண்டு, கர்த்தர் என்னை ஆறுதல்படுத்தி, உற்சாகப்படுத் துவார். அந்தக் குறிப்பிட்ட வசனத்தைச் சொல்லி சொல்லி ஜெபிப்பேன். சில சமயங்களில் அந்தக் குறிப்பிட்ட பகுதியிலுள்ள சம்பவத்தைக் கொண்டு பேசுவார். அந்த சம்பவத்தின் மூலம் தேவன் என்னோடு பேசுகிற காரியத்தை அறிந்து, அதற்காக ஜெபிப்பேன்.





அந்த வசனம் அல்லது, அந்த சம்பவம் அப்படியே என் இருதயத்தில் பதிந்து விடும். நான் சாப்பிட உட்கார்ந்தாலும், அந்த வசனம் என் இருதயத்தில் பேசிக் கொண்டேயிருக்கும்.

நான் என் ஊழியக் காரியங்களை கவனித்துக் கொண்டிருந்தாலும், அந்த வசனம் என்னோடு பேசிக் கொண்டேயிருக்கும்.

அந்தநாள் முழுவதும் அந்த வேத வசனம் என்னோடு பேசிக் கொண்டேயிருக்கும்.

இப்படி தியானிப்பதினால், சில நாட்களில் ஐந்து வசனத்திற்கு மேல் என்னால் வாசிக்க முடிவதில்லை.

'அதிகாலை ஜெப நேரத்தில் வேதத்தில் நிறைய வாசித்து விட வேண்டும்' என்று, நான் எண்ணுவதில்லை. "இன்று, தன் வசனத்தின் மூலம், ஆவியானவர் என்னோடு பேச வேண்டும்'' என்ற தாகத்தோடு வேதத்தை வாசிப்பதுண்டு.

குறிப்பிட்ட வசனத்தை அல்லது வேதாக சம்பவத்தைத் தியானிக்கத் தியானிக்க, அந்த வசனம் அப்படியே என் இருதயத்தில் பதிந்து விடும்.

கர்த்தர் என்னோடு பேசுகிற வசனங்களை கலர் பென்சிலால் கோடிட்டுக் கொள்வேன். எப்பொழுது வேதத்தைத் தியானித்தாலும், அருகில் கலர் பென்சில்கள் இருக்கும். எங்கு ஊழியத்திற்குப் போனாலும், கலர் பென்சில்களை எடுத்துச் செல்வேன். இது என்னுடைய பழக்கமாகி விட்டது.

என் வேதாகமத்தில் பல பக்கங்கள் என் கண் ணீரினால் நனைந்திருக்கிறது. ஆவியானவர் வேத வசனத்தைக் கொண்டு பேசும்போது, பல சமயங்களில் அவருடைய பாதத்தில் கண்ணீர் வடித்திருக்கிறேன்.

ஒருநாள், இயேசு விடுவிக்கிறார் ஊழிய அலுவலகத்தில் ஊழிய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று வேதத்தைத் தியானிக் கும்படி ஆவியானவர் என்னை ஏவினார். உடனே என் வேலைகளையெல்லாம் அப்படியே விட்டுவிட்டு,

அருகிலிருந்த தோட்டத்திற்கு என் வேதப் புத்தகத்தோடு சென்றேன். முழங்காலில் நின்று, வேதத்தை வாசிக்க ஆரம்பித்தேன். ஒரு குறிப்பிட்ட பகுதியை வாசிக்கும்படி ஆவியானவர் என்னை ஏவினார். சுமார் ஒருமணி நேரம் வேதத்தை வாசித்தேன். அந்த ஒருமணி நேரத்தில் ஒரு அதிகாரத்தைக்கூட என்னால் தாண்ட முடியவில்லை.

இந்தக் கர்த்தருடைய வேதமே, என்னைப் பரிசுத்தத்தின் பாதையில் நடத்துகிறது. நீங்களும் இப்படி வேத வசனங்களை வாசித்து, தியானியுங்கள். வேதத்தைத் தியானிக்கிற நேரம் ஆவியானவர் உங்களோடு பேசுகிற நேரமாக இருக்கும்.

நாம் தியானிக்கிற வேதப் பகுதியோடு, நம் வாழ்க்கையை ஒப்பிட்டு, நம்மை அர்ப்பணித்து ஜெபிப்பதே முக்கியம்.

ஒரு கதைப் புத்தகத்தைப்போல வேதத்தை நீங்கள் வாசித்துக் கொண்டு போனால், ஒருவேளை வேத அறிவு உங்களுக்கு உண்டாகலாம்!

உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால், வேத வசனங்களை தியானித்து, அந்த வசனத்தின்படி வாழ அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் வாசித்து, தியானிக்கிற வேத பகுதியை வைத்து ஜெபிப்பது மிகவும் முக்கியம்.

கர்த்தாவே,

**"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.**

**உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.**

**உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்." சங். 119:11,92,97.**

இது உங்கள் அனுபவமாகட்டும்.





3) 20 நிமிடங்கள் :

## ஜெபியுங்கள்!

கர்த்தரைத் துதித்து, வேத வசனங்களை தியானித்து, அர்ப்பணித்த பிறகு, ஜெப நேரத்திற்குள் கடந்து வாருங்கள். உங்கள் ஜெபத்தைக் கேட்டு, பதிலளிக்கிற ஆண்டவர் இயேசு, இப்பொழுது உங்களுக்குச் சமீபமாயிருக்கிறார். அவருடைய பிரசன்னத்தை உங்கள் ஆவியில் உணர்கிறீர்கள்.

இந்த தேவப் பிரசன்னத்தோடு விண்ணப்பம் பண்ணுங்கள். ஆவியானவர் ஜெப நேரத்தில் உங்களுக்கு உதவி செய்வார். வேத வசனங்களை ஆதாரமாக முன் வைத்து கிரமமாக ஜெபித்தால், அதிக நேரம் உங்களால் ஜெபிக்க முடியும். என்னுடைய ஜெப அனுபவத்தையே உங்களுக்கு எழுதுகிறேன்.

**1. எல்லோருக்காகவும் ஜெபியுங்கள்!**

**"நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;**

**நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது." 1தீமோ. 2:1,3.**

முதலாவது, மற்றவர்களுக்காக ஜெபியுங்கள். இது தேவனுக்குப் பிரியமான ஒரு காரியம்! தமிழ்நாட்டிலுள்ள எல்லோரும் இரட்சிக்கப்பட ஜெபியுங் கள்.

குஜராத்திற்காக, பீஹாருக்காக, மத்தியப் பிரதேசத்திற்காக, உத்திரப் பிரதேசத்திற்காக, மஹாராஷ்டிராவுக்காக...என்று, இப்படி ஒவ்வொரு மாநிலத்தின் பெயரையும் குறிப்பிட்டு, அங்குள்ள மக்களெல்லாம் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். சாத்தானின் அடிமைத்தனத்திலிருக்கும் மக்கள் விடுதலையடைய ஜெபியுங்கள்! மூடப் பழக்க வழக்கங்களுக்குள் சிக்குண்டு கிடக்கும் மக்கள் இயேசுவை அறிய ஜெபியுங்கள்!

ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்காக ஜெபிக்கலாம். இப்படி மற்றவர்களுக்காக ஜெபிப்பது, தேவனுக்குப் பிரியமான காரியம்! மற்றவர்களுக்காக ஜெபிக்கிற உங்களைக் குறித்துக் கர்த்தர் சந்தோஷப்படுவார்.

**2. அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்காக ஜெபியுங்கள்!**

**"நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே ஜெபிக்க வேண்டும்.**

**நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது." 1 தீமோ. 2:2,3.**

குறிப்பாக தேசத்தை ஆள்கிற தலைவர்களுக்காக, தேசத்தின் அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

ஒரு தேசத்தின் அமைதியும், சமாதானமும், ஜெபிக்கிற தேவப் பிள்ளைகளின் முழங்காலில்தான் அடங்கியிருக்கிறது. தேவப் பிள்ளைகள் தேசத்திற்காக ஜெபிக்கத் தவறும்போது, தேசத்தில் கலகமும், அமைதியற்ற சூழ்நிலையும் உண்டாகும்.

இந்த உத்தரவாதத்தை உணர்ந்து, **தினமும் தேசத் தலைவர்களுக்காக ஜெபியுங்கள்.**

**ஜெபிக்கிற உங்கள் மூலமாகத்தான் தேசம் ஆசீர்வதிக்கப்படும். நீங்கள் தேசத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறவர்கள்** என்ற உணர்வோடு ஜெபியுங்கள்.

தேசத்தை ஆள்கிறவர்களுக்காக நீங்கள் ஜெபிக்க வேண்டுமானால், முதலாவது நீங்கள் அவர்களை நேசிக்க வேண்டும். அவர்களைக் குறித்து வேதம் சொல்கிறதைப் பாருங்கள்:

**"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால்,**





**தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது.**

**ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான்; அப்படி எதிர்த்துநிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.**

**உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான்." ரோமர் 13:1,2,4.**

தேசத்திலுள்ள அதிகாரங்களெல்லாம் தேவனால் உண்டானவைகள். தேசத்தை ஆள்கிறவர்கள், அதிகாரத்தில் இருக்கிறவர்கள், தேவனால் நியமிக்கப்பட்ட தேவ ஊழியக்காரர்களாய் இருக்கிறார்கள். கர்த்தரையன்றி ஒரு அதிகாரமுமில்லை.

இதை உணர்ந்தவர்களாக தேசத்தை ஆளக்கூடிய தலைவர்களுக்காகக் கருத்தாக ஜெபிக்க வேண்டும். ஜனாதிபதி, பிரதம மந்திரி, மத்திய மந்திரிகள், எம்.பிக்கள், மாநிலத்தின் முதல் மந்திரிகள், மாநில மந்திரிமார்கள், எம்.எல்.ஏக்கள், கவர்னர்கள், கலெக்டர்கள், தாசில்தார்கள், கட்சித் தலைவர்கள், போலீஸ் அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள்...என்று, இப்படி அதிகாரத்திலிருக்கிற யாவருக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

கர்த்தர், தலைவர்களுக்கு நல்ல சுகத்தையும், பாதுகாப்பையும் கொடுக்க ஜெபிக்க வேண்டும்.

கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும், ஜனங்கள் மீது அன்பையும் ஆண்டவர் இந்த அதிகாரிகள், தலைவர்களுக்குக் கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

ஜனங்களுக்கு நன்மைகளைக் கொடுக்கக் கூடிய நல்ல திட்டங்களைக் கொண்டு வரும்படியும், அதை நிறைவேற்றக்கூடிய ஞானத்தைக் கொடுக்கும்படியும் ஜெபியுங்கள்.

சுய நலமில்லாமல், லஞ்சம் வாங்காமல், உண்மையோடு தேசத்தின் நன்மைக்காக வேலை செய்யும்படி ஜெபியுங்கள்.

தேசத்தின் சமாதானத்திற்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபியுங்கள்.

**3. தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்!**

**"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்." எபே. 6:18.**

உங்கள் சபையின் மேய்ப்பருக்காகவும், உங்கள் சபையின் ஊழியங்களுக்காவும் ஜெபியுங்கள்.

உங்களுக்குத் தெரிந்த சுவிசேஷகர்கள் யாவருக்காகவும், அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு ஜெபியுங்கள்.

வட இந்தியாவில் பணி செய்யும் மிஷனெரிமார்களுக்காக ஜெபியுங்கள். மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக ஜெபியுங்கள்.

**''...அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;**

**ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்...''(மத்தேயு 9:37)** என்ற இயேசுவின் வார்த்தையை முன்வைத்து, ஏராளமான மிஷனெரிகளைக் கர்த்தர் எழுப்ப ஜெபியுங்கள். ஆத்தும அறுவடைக்குச் சரியான ஆட்களைக் கர்த்தர் அனுப்பும்படி ஜெபியுங்கள்.

**4. உங்களுக்காக ஜெபியுங்கள்!**

உங்கள் சொந்த ஆவிக்குரிய வாழ்க்கைக்காக, அந்தந்த நாளுக்குரிய ஆவியானவரின் வல்லமைக்காக ஜெபியுங்கள். அன்றன்றைக்கு நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செய்வதற்குரிய ஞானத்திற்காக, ஆவியானவரின் வழி நடத்துதலுக்காக ஜெபியுங்கள்.





உங்கள் குடும்பத்திலுள்ள யாவருக்காகவும், தனித்தனியாக பெயர் சொல்லி ஜெபியுங்கள்.

உங்கள் தேவைகளுக்காக ஜெபியுங்கள்.

**பரிசுத்த ஆவிக்குள் ஜெபியுங்கள்!**

**"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி,..." (எபே. 6:18).**

**"...பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி,..." யூதா 20.**

பரிசுத்த ஆவியானவர், உங்கள் ஜெபத்தில் உங்களுக்கு உதவி செய்யக் கூடியவர் **(ரோமர் 8:26,27).** ஜெப நேரத்தில் அவருடைய உதவியை நாடுங்கள். பரிசுத்த ஆவியில் நிறைந்து ஜெபியுங்கள்.

பரிசுத்த ஆவிக்குள் நீங்கள் ஜெபிக்க ஜெபிக்க, உங்கள் ஜெப நேரமே வித்தியாசமாய் மாறி விடும். ஜெபம் ஒரு இனிமையான அனுபவமாகி விடும்.

**என் அனுபவம்!**

தினமும் காலையில், என் ஜெப நேரத்தில் ஆவியானவருக்கு நான் இடம் கொடுப்பதுண்டு. துதிக்கும்போதே பரிசுத்த ஆவிக்குள் நிறைந்து, அந்நிய பாஷையில் கர்த்தரைத் துதித்து மகிழ்வேன். பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தோடுதான் என் வேதத்தைத் தியானிப்பேன்.

ஆவியானவர் வேத வசனத்தின் மூலம் என்னோடு பேசுவார். வசனத்தின் அர்த்தத்தை விளக்கிச் சொல்லித் தருவார். அந்த நேரத்தில் என் அருகில் ஒருவர் அமர்ந்து கற்றுத் தருவதைப்போல் உணர்கிறேன்.

ஜெப நேரத்திலும் ஆவியானவரின் வழி நடத்துதலை நாடுவேன். தமிழ்நாட்டிலுள்ள ஒரு

மாவட்டத்திற்காக தினமும் ஜெபிப்பேன். அதன் பிறகு, இந்தியாவிலுள்ள ஒரு மாநிலத்திற்காக குறிப்பாக ஜெபிப்பேன். பிறகு, உலகின் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்காக ஜெபிப்பேன்.

'இந்த நாளில் நான் எந்த மாவட்டத்திற்காக ஜெபிக்க வேண்டும்?' என்று, ஆவியானவரின் உதவியை நாடுவேன். பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட மாவட்டத்தைக் குறித்த ஏவுதலை எனக்குள் கொடுப்பார். அந்த மாவட்டத்திற்காகக் கருத்தாக சில நிமிட நேரம் ஜெபிப்பேன்.

அந்த மாவட்டத்திலுள்ள சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, அங்கு நடைபெறும் ஊழியங்களுக்காக, அங்குள்ள புறஜாதி மக்களின் இரட்சிப்பிற்காக...என்று, இப்படி ஒவ்வொன்றாக ஜெபிப்பேன்.

அதன் பிறகு, 'இந்தியாவின் எந்த மாநிலத்திற்காக ஜெபிக்க வேண்டும்?' என்பதை ஆவியானவர் என் இருதயத்தில் உணர்த்துவார்.

அந்த மாநிலத்திற்காக ஜெபிக்க ஆரம்பிப்பேன். அந்த மாநிலத்திலுள்ள சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, மிஷனெரிகளுக்காக அங்கு நடைபெறும் ஊழியங்களுக்காக, அந்த மாநிலத்தின் இரட்சிப்பிற்காக...என்று, இப்படி அந்த குறிப்பிட்ட மாநிலத்திற்காக ஜெபிப்பேன்.

அதன் பிறகு, உலகின் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்காக ஜெபிக்க ஆவியானவரின் உதவியை நாடுவேன். ஒரு குறிப்பிட்ட நாட்டிற்காக ஜெபிக்க ஆவியானவர் என்னை ஏவுவார். அந்த நாட்டிற்காகக் கருத்தாக ஜெபிப்பேன்.

அதன் பிறகு, எனக்குத் தெரிந்த எல்லா தேவ ஊழியர்களின் பெயரையும் சொல்லி, அவர்களுக்காக ஜெபிப்பேன். சில சமயங்களில் தேவ ஊழியர்களுக்காக ஜெபிக்கும்போது, குறிப்பிட்ட ஊழியர்களைக் குறித்த பாரத்தை ஆவியானவர் எனக்குள் உண்டாக்குவார்.

அந்த தேவ ஊழியருக்காக ஆவியானவர் நடத்துகிறபடி விசேஷமாக ஜெபிப்பேன். சில சமயங்களில்





அந்தக் குறிப்பிட்ட ஊழியருக்கு, 'என்ன காரியத்திற்காக ஜெபிக்க வேண்டும்?' என்பதையும் ஆவியானவர் எனக்குக் காண்பிப்பார்.

இப்படி, ஆவியானவரின் வழி நடத்துதலின்படி ஜெபிக்கும்போது, நேரம் போவதே தெரியாது. ஆவியானவரோடு இணைந்து ஜெபிக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

**நம்முடைய ஜெபத்தில் நமக்கு உதவி செய்கிற நல்ல நண்பர் பரிசுத்த ஆவியானவர்!**

**இன்றுமுதல், அதிகாலையில் ஆண்டவரோடு...**

நாளை அல்ல, இன்றே இது உங்கள் அனுபவமாய் மாறட்டும்!

இதுவரை உங்கள் ஜெப வாழ்க்கை எப்படியிருந்தாலும் பரவாயில்லை. இன்று ஆண்டவர் உங்களோடு பேசியிருக்கிறார். இன்றுமுதல், அதிகாலையில் ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்திருக்க உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். இன்றுமுதல், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை வித்தியாசமாய் மாறும்.

சில நாட்கள் நீங்கள் சோர்ந்து விடக் கூடும்! ஆரம்பத்தில் உற்சாகமாக சில நாட்கள் அதிகாலையில் எழுந்து ஜெபிப்பீர்கள். திடீரென்று ஒரு பிரச்சனை வரும்போது, அந்த நாளில் ஜெபிக்க முடியாமல் ஆகி விடும்.

சில சமயங்களில் நீங்கள் காலையில் எழுந்து ஜெபிக்க விரும்புவீர்கள். ஆனால், சரீரக் களைப்பினால், 'இன்று வேண்டாம்' என்று அசதியாயிருந்து விடுவீர்கள்.

இப்படி சில சோர்வுகள் உண்டாவதினால், 'என்னால் தொடர்ந்து இப்படிக் காலையில் எழுந்து ஜெபிக்க முடியாது' என்ற முடிவுக்கு வந்து விடாதீர்கள். உங்களால் முடியும். ஒருநாள் சோர்ந்து போனால், அடுத்த நாள் முயற்சி செய்யுங்கள்! ஒருநாள் தடை ஏற்பட்டால், அடுத்த நாள் பிரயாசப்படுங்கள்! எடுத்த உடனேயே யாரும் ஆவிக்குரிய வாழ்க்கையில் உன்னத நிலைக்கு வந்துவிட முடியாது. கொஞ்சம் கொஞ்சமாக சோர்வுகளையும்,

தடைகளையும் தாண்டித்தான் வளர்ச்சியடைய வேண்டும். உங்கள் ஜெப வாழ்க்கையும் அப்படித்தான். ஒரே நாளில் மேன்மையான நிலையை அடைந்து விட முடியாது.

நானும் என் ஆவிக்குரிய வாழ்க்கையில், ஜெப வாழ்க்கையில் சோர்ந்து போன நேரங்கள் உண்டு. ஜெபிக்க விரும்பியும், முடியாமல் போன சமயங்கள் உண்டு.

ஆகவே, "என்னால் முடியாது" என்று விட்டு விடவில்லை. அடுத்த நாள் முயற்சிப்பேன். இப்படிப் போராடிப் போராடி, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வளர்ந்து வந்தேன்.

தொடர்ந்து நாம் முயற்சிக்க முயற்சிக்க, ஆவியானவரும் நமது பலவீனத்தில் நமக்கு உதவி செய்வார். அதன் பிறகு, தினமும் அது நமது அனுபவமாகி விடும். எங்கு போனாலும் அது நமது ஆவிக்குரிய பழக்கமாகி விடும். அதன் பிறகு நம்முடைய ஆவிக்குரிய பழக்கத்தை நம்மில் மாற்ற சாத்தானால் முடியாது.

ஆகவே, உங்களால் ஜெபிக்க முடியும்! நீங்கள் ஜெயம் பெற்றவர்களாய் விளங்குவீர்கள்!

**உங்கள் ஜெபம் எங்களுக்குத் தேவை!**

கர்த்தர் இந்த, 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தை ஆரம்பிக்கும்பொழுது ஒரு ஜெபக் குழுவாகவே ஆரம்பித்தார். ஜெபத்தின் மூலமாகவே இந்த ஊழியம் வளர்ந்து வருகிறது.

இந்தியாவிலும், வெளி தேசங்களிலும் ஆயிரக்கணக்கான ஜெப நண்பர்களைக் கர்த்தர் எழுப்பிக் கொடுத்திருக்கிறார். இவர்கள் தினந்தோறும் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காக ஜெபித்து வருகிறார்கள்.

அவர்களுக்காகவும் நாங்கள் தினந்தோறும் ஜெபிக்கத் தவறுவதேயில்லை. இந்த ஜெப நண்பர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ஜெபக் குறிப்புகள் அனுப்புகிறோம்.





நீங்களும் இவ்வூழியத்தின் ஜெப நண்பர்களாக இணைந்து ஜெபிக்க, உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் தெளிவான முகவரியோடு கீழ்கண்ட எங்கள் முகவரிக்கு எழுதுங்கள். ஜெபக் குறிப்புகள் அனுப்பி வைப்போம்.

**இயேசு விடுவிக்கிறார் ஜெப நண்பன்,**
**நாலுமாவடி - 628 211, தூத்துக்குடி மாவட்டம், இந்தியா.**

இங்கே கத்தரிக்கவும்.

**'அதிகாலையில் ஆண்டவரோடு!'**
என்ற இப்புத்தகத்தின் மூலம்

## நான் பெற்ற ஆசீர்வாதங்கள்!

(கட்டத்தில் ✓ செய்யவும்)

- ☐ இயேசு கிறிஸ்துவைப் பற்றி முதன்முதலாக அறிந்து கொண்டேன்.
- ☐ இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டேன்.
- ☐ கவலை நீங்கி ஆறுதலடைந்தேன்.
- ☐ பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்டேன்.
- ☐ ----------------------------------------------
  ----------------------------------------------
- ☐ ----------------------------------------------
  ----------------------------------------------

எனது முகவரி:

----------------------------------------------

----------------------------------------------

----------------------------------------------

----------------------------------------------

**குறிப்பு: தயவு செய்து இந்தப் படிவத்தை நிரப்பி, பின்பக்கம் உங்கள் ஜெபக் குறிப்புகளையும் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.**



## ஜெபக் குறிப்புகள்

இங்கே கத்தரிக்கவும்

# *Early Morning With* GOD

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார்,**

**நாலுமாவடி-628 211,**

தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

Ph : (04639) - 235 305, 235 705 Fax : (04639) - 235 415

Email : info@jesusredeems.com Visit: www.jesusredeems.com

**24 மணி நேர ஜெப உதவிக்கு : 04639 - 235 315**